
155

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 1

# ஆப்பிரிக்கா



'சோமலெ'

155
3.65
V6
N64
570

ள் வரிசை—1

# ஆப்பிரிக்கா

(முன்னுரை)

MADRAS RECORD OFFICE
MADRAS

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.


64.

Acc. No 570
of 17.11.77
960

முதற் பதிப்பு : அக்டோபர் 1964

விலை 60 காசு

V6
N64



ஆப்பிரிக்கா
அரசியல் பிரிவுகள்

விவரம் 22-ம் பக்கம் காண்க.

570

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

V6
N64

# முன்னுரை

கொச்சித் துறைமுகத்தில் கப்பலேறி மேற்கு நோக்கி நேரே சென்றால் எட்டு நாட்களில் ஆப்பிரிக்காவின் கரையை அடையலாம்.

ஆப்பிரிக்காவின் பரப்பு உலகப்பரப்பில் நான்கில் ஒன்று. உலக மக்களில் 10-இல் ஒரு பங்கினர் ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத மூலப் பொருள்கள் ஆப்பிரிக்காவில் அளவு கடந்து காணப்படுகின்றன. ஐரோப்பியர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொண்டும் தங்களுடைய ஆதிக்கத்தை அப்பாவிகளான ஆப்பிரிக்கர்மீது நிலைநாட்டிக் கொண்டும் வந்தனர். 60 லட்சம் வெள்ளையருக்கு 25 கோடி கறுப்பர்கள் அடிமைப்பட்டிருந்தனர், 'கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்' என்று விதியை நொந்தனர்.

இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் தொடங்கிய கிளர்ச்சியின் விளைவாகச் சுதந்திர வேட்கை பெருக்கெடுத்து வரவர வலுப்பெற்றிருக்கிறது. ஆப்பிரிக்கா அனைத்தும் அரசியல் இருள் அகன்றுவருகிறது. சுதந்திர சூரியன் ஒளிவீசத் தொடங்கி

யுள்ளது. வெள்ளையரோடு கறுப்பரும் சமத்துவநிலை அடைந்து வருகின்றனர். பொருளாதாரத்துறையிலும் பொலிவுபெற முதல் அடிஎடுத்து வைக்கின்றனர். வளமான வருங்காலம் அவர்களை எதிர்நோக்குகிறது.

21-ஆம் நூற்றூண்டு ஆப்பிரிக்காவின் பொற் காலமாக இருக்குமென்பது உறுதி. அவ்வாறுதான் அறிஞர் அனைவரும் கருதுகின்றனர். அதற்குரிய அறி குறிகளை இப்போது பார்க்கிறேம். உலக அரங்குகளில் ஆப்பிரிக்க நாடுகளின் குரல் ஒலிப்பதைக் கேட்கிறேம். இந்த நாடுகளைப் பற்றிய அடிப்படைச் செய்திகளையும் வரலாற்றுப் பின்னணியையும் சுருங்கக் கூறுவதே இந் நூல் வரிசையின் குறிக்கோள்.

இந்த முதல் நூலில் ஆப்பிரிக்காவைப் பற்றிய பொதுவான செய்திகளையும், ஆப்பிரிக்க நாடுகள் இன்ன இன்ன என்பதையும், இவற்றின் முக்கியத்துவத்தையும், இந்தியாவுக்கும் இந்நாடுகளுக்கும் உள்ள உறவுகளையும், 1964 தொடக்கத்தில் நிலவும் அரசியல் நிலையையும் குறிப்பிடுவோம்.

# நிலப்பரப்பு

ஆறு கண்டங்களில், ஆசியாவுக்கு அடுத்தபடியாகப் பெரிய பரப்பளவை உடையது ஆப்பிரிக்கா. இதன் பரப்பு ஒரு கோடியே 12 லட்சத்து 62,000 சதுரமைல், அதாவது இந்தியாவைப்போல ஒன்பது பங்கு; அமெரிக்காவைப்போல நான்கு பங்கு.

இப்பரப்புத் தவிர, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த (மல்கசே எனப்படும் மடகாஸ்கர், ரியூனியன், கானரித் தீவு முதலிய) தீவுகளும் உள்ளன. இவற்றின் பரப்பளவு 2,39,000 சதுரமைல், அதாவது தமிழ்நாட்டைப்போல $4\frac{3}{4}$ பங்கு.

ஆப்பிரிக்கா கண்டமே ஒரு தீவு என்றும் சொல்லலாம். இந்தியப் பெருங் கடல், அட்லாண்டிக் பெருங் கடல், மத்திய தரைக்கடல், செங்கடல் ஆகியவை சூழ்ந்திருப்பதால் இது ஒரு தீவுதான். இந்த நிலை 1869-இல் ஏற்பட்டது. 100 மைல் (161 கி. மீ.) தொலைவுக்குச் சூயஸ்கால்வாய் மனித முயற்சியால் வெட்டப்பட்டு, மத்திய தரைக்கடலும் செங்கடலும் இணைக்கப்பட்டன. அதற்கு முன், ஆப்பிரிக்கா ஆசியாவுடன் ஒட்டிக் கொண்டிருந்தது.

சூயஸ்கால்வாய் வெட்டப்பட்ட பிறகு, ஆப்பிரிக்காப் படத்தைச் சற்று சாய்த்து வைத்துப் பார்த்தால், ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியாவைப் போலவே தோற்றம் தருவது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்காவின் நீளம் வடக்கேயிருந்து தெற்கே 5,000 மைல். அகலம், கிழக்கேயிருந்து மேற்கே

(லைபீரியா முதல் சோமாலி குடியரசு வரை) 4,600 மைல். ஆப்பிரிக்காவின் அகலம் இந்தியாவின் நீளத்தைப்போல இரண்டு பங்கு இருக்கிறது!

## மக்கள் தொகை

ஆப்பிரிக்காவின் பல பகுதிகள் மிகமிகப் பின்தங்கியவை. மக்கள் தொகை பற்றிச் செம்மையான புள்ளி விவரங்கள் இல்லை. ஆப்பிரிக்காவில் மொத்தம் 25 கோடி மக்கள் வாழ்வதாகக் 'குத்து மதிப்பாக' 1961-இல் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆப்பிரிக்க நாடுகளுள் மக்கள் மிகுதியாக உள்ளது நைஜீரியா ($3\frac{3}{4}$ கோடி). ஆப்பிரிக்க நகரங்களுள் பெரியது கெய்ரோ; சென்னை மாநகரம் அளவு பெரிய நகரம் ஆப்பிரிக்காவில் வேறு ஒன்றுகூட இல்லை. ஆப்பிரிக்காவின் பிற நகரங்களுள் முக்கியமானவை—ஜோகானஸ்பர்க், டர்பன், நைரோபி, அலெக்சாண்ட்ரியா, அக்ரா, கேப்டவுன், ஆடிஸ் அபாபா, லியோபோல்டுவில்லி, பிரிட்டோரியா.

## இயற்கையமைப்பு

### மலைகள்

வட ஆப்பிரிக்கக் கடற்கரையருகே மொராக்கோ, அல்ஜீரியா, டுனிஸ் ஆகியவற்றில் ஆங்காங்கு மலைப் பகுதிகள் உள்ளன. உயர்ந்த மலைகள் கிழக்காப்பிரிக்காவில் தங்கனீகாவில் உள்ளன. இவற்றுள் ஒன்ருன கிலிமன்ஜாரோ மலையின் உயரம் 19 565 (எவரெஸ்டு

29,028 அடி, நீலகிரி 7,000 அடி) அடி. ஆப்பிரிக்காவி லேயே மிகவும் தாழ்ந்தபகுதி எகிப்திலுள்ள குவாட்டா ராப் பள்ளம்; இது கடல் மட்டத்திற்கு 440 அடி கீழே இருக்கிறது.


### ஆறுகள்

நீர்வளம் நிரம்பியது ஆப்பிரிக்கா. நைல், காங்கோ, நைஜர், ஜம்பேசி, ஆரஞ்சு, செனிகல், வோல்ட்டா என்னும் பேராறுகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் குறைந்தது 1,000 மைலுக்கு ஓடுகின்றன. தமிழ் நாட்டின் பெரிய ஆறு காவிரி; குடகில் தோன்றுமிடத்தி லிருந்து காவிரிப்பூம்பட்டினத்தில் கடலில் கலக்கும்வரை. அதனுடைய ஓட்டம் 480 மைல்தான். 2,900 மைல் பாயும் காங்கோவும் 4,160 மைலுக்குச் செல்லும் நைலும் ஆப்பிரிக்காவில் இருக்கின்றன; எனவே அவை கங்கையிலும் (1,540 மைல்) பெரியவை. தொழில் வளர்ச்சியின்மை காரணமாக அயலவர் ஆட்சியில் அல்ல லுற்ற ஆப்பிரிக்கா ஆற்றுநீரை ஆக்க வேலைக்குப் பயன் படுத்தவில்லை. மின்சாரத் திட்டங்களை உருவாக்கும் முயற்சி 1960 - இலிருந்து சில சுதந்தர நாடுகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பெரிய ஏரிகள் பலவும் ஆப்பிரிக்காவில் காணப் படுகின்றன. குறிப்பிடத்தக்கவை — விக்டோரியா, தங்கனீகா, நியாசா, ரூடோல்ப், பங்க்வெய்யுலா, ஆல் பர்ட். விக்டோரியா ஏரியின் பரப்பு தமிழ் நாட்டில் பாதி (26, 828 சதுரமைல்); ஆல்பர்ட் ஏரியின் பரப்பு கன்னியாகுமரி மாவட்டத்தைப்போல இரண்டே முக்கால் பங்கு (1,640 சதுரமைல்).

## பாலைவனங்கள்

ஆப்பிரிக்காவில் கால் பங்கு பாலை வனம். நடு ஆப்பிரிக்காவுக்கும் வட ஆப்பிரிக்காவுக்கும் இடையே சகாரா, கலகாரி, லிப்யா, நுபியன் முதலிய பாலை வனங்கள் உள்ளன. சகாராப் பாலைவனம் மட்டும் இந்தியாவைப்போல மூன்று பங்கு பரப்புடையது. இப்பெரும் பரப்பு, நாகரிகம் நனி சிறந்து விளங்கிய வட ஆப்பிரிக்கப் பகுதிக்கும் வெளியுலகத் தொடர்பில்லாதிருந்த தென் ஆப்பிரிக்கப் பகுதிக்கும் இடைப்பட்டிருந்தது. இந்தப் பாலை நிலப் பகுதி, ஐரோப்பியர் இதைக் கடந்து தெற்கே செல்லத் தடையாக இருந்தது. அதனால் அவர்கள் பாலைவனத்துக்கு அப்பாற்பட்ட பகுதிக்கு 'இருள் கண்டம்' என்று பெயரிட்டனர். சகாராப் பாலைவனத்தைப் பற்றி இவ்வரிசையில் 12 ஆவது நூலில் கூறுவோம்.



## காடுகள்

அடத்தியான காடுகள் ஆப்பிரிக்காவின் பரப்பில் எட்டில் ஒரு பங்கு அளவினதாக இருக்கும். யானைகள், ஒட்டகங்கள், ஒட்டைச்சிவிங்கிகள், நெருப்புக்கோழிகள், வாலில்லாத பெரிய குரங்குகள், வரிக்கழுதைகள், சிங்கங்கள் முதலியன ஆயிரக் கணக்கில் உள்ளன.

காட்டுக்கனிகளைக் களிப்புடன் தின்று சீறும் சிங்கத்துடன் சிறப்பாகப் போராடும் காண்டாமிருகங்களும், சில சமயம் தரையிலும் சில சமயம் நீரிலும் வாழும் இயல்பினதாகிய நீர்யானைகளும் ஏராளமாக இருக்கின்றன. காடுகளில் இரண்டு ஆள் உயரத்துக்குமேல் வளரும் புற்களை வெட்ட ஜுன் முதல் அக்டோபர்வரை இரவில் காடுகளில் தீ வைப்பதும், உயிரினங்களை வேட்டையாடுவதும் வழக்கம்.

## கால நிலை

ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியில் வெயிலின் கொடுமை மிகுதி. பெரும்பாலும் பிறந்தமேனியராக ஆப்பிரிக்கர்கள் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து வந்திருப்பதற்கு இதுவே காரணம்.

நடு ஆப்பிரிக்காவிலும் காங்கோவிலும் சூரியன் நெருப்புப்போல இருக்கிறது. சமீப காலமாக, அங்கே அரசியல் நெருப்பும் பற்றிக் கொண்டிருக்கிறது. கினியா கடற்கரைப் பகுதியில் வெப்பத்தின் கொடுமை கூடுதலாக இருப்பினும், 9 மாதம் மழை பெய்கிறது. வடக்கே மொராக்கோ முதல் கெய்ரோ வரையுள்ள கடலோரப் பகுதி, தென்கோடியில் கேப்டவுன்மாவட்டம், கிழக்காப்பிரிக்காவில் கினியா ஆகிய மூன்று பகுதிகள் வெள்ளைக்காரர்கள் வாழ்வதற்கேற்ற காலநிலையை உடையன.

## மழை

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கமரூனில் ஓராண்டுக்கு 300 அங்குலம் (கன்னியா குமரி மாவட்டத்தில் 150 அங்குலம்) மழை பெய்கிறது. தென்கிழக்கு ஆப்

பிரிக்காவிலுள்ள வால்பிஷ் குடாவில் மூன்று அங்குலம் பெய்கிறது. எனவே அங்கேயும் மழை கொட்டும் மாநிலங்களும் வறண்ட வட்டாரங்களும் உண்டு.


## புவியியல் வளம்

வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தி தவிர, ஆப்பிரிக்காவில் புவியியல் பொருள்களின் உற்பத்தியும் மிகுதி. மங்கையரின் எழிலுக்கு மேன்மேலும் எழிலூட்டும் வைரக்கற்களும் தொழில்வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள வைரக்கற்களும் உலகில் உற்பத்தியாவதில் 100க்கு 99 பங்கு ஆப்பிரிக்காவிலிருந்து கிடைப்பன. இவ்வாறே, மனித இனம் தோன்றியது முதல் ஆசை காட்டிவரும் முப்பொருள்களில் ஒன்றான தங்கம் ஆப்பிரிக்காவில் 55 பங்கும் உலகின் ஏனைய பகுதிகளிலெல்லாம் சேர்ந்து 45 பங்கும் தோண்டப்படுகிறது.

ஜெட் விமானங்களின் உறுப்புக்கள் செய்ய உதவும் 'கொலம்பைட்டு' என்னும் புவியியல் பொருள் ஆப்பிரிக்காவின் தனி உரிமையாக இருந்து வருகிறது. இந்த உறுப்புக்கள் செய்ய உதவுவதோடு ரேடியம் மருத்துவக் கருவிக்கும் உதவும் 'கோபால்ட்டு' 100 க்கு 86 பங்கு ஆப்பிரிக்காவிலும் 14 பங்கு ஏனைய ஐந்து கண்டங்களிலும் காணப்படுகிறது. ஈயம் (உலக உற்பத்தியில் 10%), செப்பு 16 , அண்டிமணி 23%, மங்கனீசு 38 குரோமியம் 39%, ஆகியவையும் ஆப்பிரிக்காவின் அரிய செல்வங்கள்.

சீர்ராலியோன், சுவாசிலந்து, லைபீரியா, டுனிசியா, அல்ஜீரியா, கினியா, தங்கனீகா ஆகிய ஆப்பிரிக்க நாடு

களில் இரும்புத்தாது கிடைக்கிறது. உலகிலேயே இனி ஆப்பிரிக்காதான் இரும்புத்தாது நிறைந்த நிலப்பரப்பாக இருக்குமென்று சொல்லுகிறார்கள். இரும்புத்தாது உள்ள இடங்கள் கடலோரமாக இருப்பதும் ஒரு சிறப்பு.



நிலக்கரி தென் ஆப்பிரிக்காவில் மட்டும் கிடைக்கிறது. பெட்ரோல் எடுக்கும் முயற்சிகள் தொடங்கவிருக்கின்றன; ஆனால் இது குறிப்பிடத்தக்க அளவு இருப்பதாகத் தோன்றவில்லை.

## வரலாறு

ஆப்பிரிக்காவின் வரலாற்றை முறையாக எழுதும் முயற்சி வருங்காலத்தில்தான் நடைபெறவேண்டும். இப்பெரிய கண்டத்தின் பெரும்பகுதியின் மேற்போக்கான வரலாறு பற்றிய ஒரு சில குறிப்புக்கள் 13-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன.

*13*-ஆம் நூற்றாண்டுக்குமுன் வரலாறு குறிக்கும் சிறப்புடைய நாடுகளாக இருந்தவை எகிப்து, எத்தியோப்பியா, மாலி, கானா ஆகிய நான்குமே. இக்காரணத்தால் இந்த நாடுகளைப் பற்றியும், மக்கள் தொகைப் பெருக்கத்தால் நைஜீரியாவைப் பற்றியும் தொழில் வளர்ச்சியால் தென்னாப்பிரிக்கா, சீர்ராலியோன் ஆகிய நாடுகளைப்பற்றியும் தனித்தனியே சிறு நூல்களை இவ்வரி

சையில் தருவோம். ஏனைய 43 நாடுகளைத் தொகுத்து நான்கு நூல்களில் தருவோம்.


எகிப்து 4,000 ஆண்டுகளாக உலக நாகரிகத்தின் தொட்டிலாய் அமைந்தது. எத்தியோப்பியா. மூவாயிரம் ஆண்டுகளாக வரலாற்றுச் சிறப்புடையது.

கானு கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு முதல் வளர்ச்சி பெற்று, சில நூற்றுண்டுகள் ஒரு பேரரசாகவும் திகழ்ந்தது. இருபதாம் நூற்றுண்டில், அடிமை நாடாக இருந்த காலத்திலும் ஏனைய ஆப்பிரிக்க நாடுகளைவிட முன்னேற்றம் அடைந்த நாடு கானு.

மேற்கு சூடான் என்னும் பகுதியும் பழமையான நாகரிகம் உடையது. 13—ஆம் நூற்றுண்டளவிலேயே இங்கு நம்நாட்டு நலாந்தா, காஞ்சீபுரம் போன்ற பல்கலைக் கழகங்கள் நிலவின.

பிற நாடுகளைப் பற்றிய வரலாறு ஐரோப்பியர்களால் மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆப்பிரிக்காவுக்கு வந்தது முதலே இவ்வரலாறு தொடங்குகிறது. 15-ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஐரோப்பியர் முதல் தடவையாக ஆப்பிரிக்க மண்ணில் மிதித்தபோது, இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நாகரிகம் என்பதே இன்னதென்று தெரியாதவர்களாகக் காடுகளில் வாழ்ந்ததாகவும், கடலோரப் பகுதிகளில் முதலில் ஐரோப்பியர்கள் இறங்கியபோது அங்கு மக்கள் நடமாட்டமே இல்லை என்றும், உள் நாட்டுக்குள் அவர்கள் சென்றதும் கறுப்பர்களைக் காண நேர்ந்ததாகவும் எழுதி வைத்துள்ளனர். கொலம்பஸ் கண்டுபிடித்த அமெரிக்காவில், சிவப்பு இந்தியர் என்ற இனத்தவர் பெரும்பாலும் அழிக்கப்பட்டு அவர்கள் வாழ்ந்த நாடு ஐரோப்பிய நாடுகளிலிருந்து சென்ற வெள்ளை

யர்களின் உரிமையாகிவிட்டது இவ்வாறே, கொலம்பசுக்கு முன்னரே ஐரோப்பிய நாடுகளிலிருந்து சென்ற வெள்ளை யர்கள் குடியேறிய ஆப்பிரிக்கப் பகுதிகள் அந்த வெள்ளை யர்க்கும் அவர்கள் வழியினர்க்கும் உரியன என்பதும் வெள்ளையர் பெரும்பாலோரின் வாழ்க்கைத் தத்துவமாகும்.



வெள்ளையர்களுள் ஆப்பிரிக் காவுக்கு முதலில் வந்தவர்கள் போர்த்துகீசியர்கள்;கடைசியாக ஆப்பிரிக்காவைவிட்டுச் செல்லு பவர்களும் அவர் களாகத்தான் இருப்பார்கள். 'பிரின்ஸ் ஹென் றி தி நாவிகேட்டர்' என்ற போர்த்துக்கீசியர் 1444-இல் இக் கண்டத்தைக் கண் டார். பிறகு 1497—ல் இந்தியாவுக்குச் செல்லும் வழியில் ஆப்பிரிக்காவின் தென் கோடியான நன்னம் பிக்கை முனை (Cape of Good Hope) யை வாஸ்கோட காமா என்ற போர்த்துக்கீசியர் அடைந்தார்.

போர்த்துக்கீசியருக்குப் பிறகு ஆங்கிலேயர், பிரெஞ் சுக்காரர், டச்சுக்காரர்,பெல்ஜியம் நாட்டினர், ஸ்பெயின் நாட்டினர், ஜெர்மானியர், இத்தாலியர் ஆகியோரும் ஆப்பிரிக்காவுக்கு வந்து கடலோரங்களில் அவரவர் விரும்பிய பகுதிகளைப் பிடித்துக்கொண்டனர். 1884-இல் பெர்லினில் நடைபெற்ற ஒரு மாநாட்டில். ஐரோப்பிய அரசுகள், ஆப்பிரிக்காவின் உள் நாட்டுக்குள் ஒவ்வொரு வரும் இன்ன இன்ன இடங்களை வைத்துக்கொள்ளலாம் என்று உடன்பாடு செய்துகொண்டன. கத்தியின்றி இரத்தமின்றி பணச்செலவுமின்றி உலகின் நான்கில் ஒரு பகுதியை அவை தமதாக்கிக் கொண்டன. முதல் உலகப் போருக்குப் பிறகு, 1922-இல் சர்வதேச சங்கத்திற்காக

மேற்பார்வை செய்யும் பொறுப்புடன் ஜெர்மன் ஆட்சியிலிருந்த பகுதிகளைப் பிற ஐரோப்பிய நாடுகள் பங்கு போட்டுக் கொண்டன. இரண்டாவது உலகப் போரின் பயனாக இத்தாலிய ஆட்சி ஆப்பிரிக்காவில் ஒழிந்தது.

ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் வரலாறு 8 பகுதிகளில் அடங்கும்:

(1) கடற்பாதை கண்டுபிடிப்பு

(2) உள்நாட்டுக்குள் புகுதல்

(3) வியாபார நிறுவனங்கள் அமைத்தல்

(4) மதப் பிரசாரம்

(5) வியாபார நிறுவனங்கள் அரசியல் அதிகாரம் செலுத்துதல்.

(6) நேரடியான அரசாங்கம் அமைத்தல்

(7) தங்கமும் வைரமும் தோண்டி எடுத்தல்

(8) போயர்ச் சண்டை

(9) சுய ஆட்சிக் கிளர்ச்சியும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும்

(10) கானாவின் சுதந்தரமும் அதன் விளைவுகளும்.

கடற்பாதை கண்டுபிடிப்பு

15-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் துடி துடிப்பும் விறுவிறுப்பும் உடையவராக இருந்தனர். நாடுபிடிக்கும் ஆசை அவர்களிடம் மேலோங்கியிருந்தது. வளம்மிகுந்த இந்திய நாட்டைக் காண வேண்டுமென்ற எண்ணம் ஏற்றம் பெற்றது. துணிவும் கடற்படை வல்லமையும் உடைய போர்த்துக்கீசியர்கள் புது நாடுகளைக்கண்டுபிடிப்

பதில் சிறப்புற்று விளங்கினர். அவர்களே ஆப்பிரிக்காவில் அடியெடுத்து வைத்த முதல் ஐரோப்பிய இனத்தார் ஆவர். அவர்களைப் பின் தொடர்ந்து ஏனைய வெள்ளைக்காரர்களும் ஆப்பிரிக்காவுக்கு வருவாராயினர்.

இவ்வாறு வந்த வெள்ளையர்கள் துணிகளையும் மதுவகைகளையும், துப்பாக்கிகளையும் கொடுத்து, அவற்றுக்குப்பதிலாக ஆப்பிரிக்கரிடமிருந்துயானைத் தந்தத்தையும்,பொன்னையும் அடிமைகளையும் பெற்றுக்கொண்டனர். இப்பண்டமாற்று வியாபாரம் 1652 முதல் 1800 வரை பெரிய அளவில் நடைபெற்றது. பல நூற்றுண்டுகளாக அடிமைகளை விற்பதில் தலை சிறந்திருந்த அராபிய வணிகர்களை, அத்துறையில் ஐரோப்பியர் மிஞ்சிவிட்டனர்.

## உள் நாடு புகல்

இந்த வியாபாரங்கள் செழித்தமையால், மேலும் மேலும் இப்பொருள்களைப் பெறவும் அடிமைகளைப் பிடிக்கவும் வெள்ளையர்கள் உள்நாட்டுக்குள் சென்றனர். இதற்குத் துணையாக, ஐரோப்பிய நாடுகளிலிருந்து கூட்டம் கூட்டமாக வெள்ளையர்கள் ஆப்பிரிக்காவில் குடியேறலாயினர். 1800-இல் தொடங்கிய குடியேற்றம் 1947 அளவில்தான் தடைபட்டிருக்கிறது. இப்போது ஆப்பிரிக்காவில் 50 லட்சம் வெள்ளையர் இருக்கின்றனர்; இவர்களில் 30 லட்சம் பேர் தென் ஆப்பிரிக்கா என்னும் சுதந்திர நாட்டில் வாழ்ந்து, ஒரு கோடி ஆப்பிரிக்கரை அடக்கியாண்டு வருகின்றனர்.

உள்நாட்டுக்குள் சென்றபோது சில இடங்களில் ஆப்பிரிக்கர் வெள்ளையரை எதிர்த்தனர். குறிப்பாக, ஜுலூ இனத்தவர் வெள்ளையர்களைக் கொலை செய்தனர். துப்பாக்கியால் சுட்டு, பிரிட்டிஷார் 1907-இல் அவர்களை

அடியோடு ஒடுக்கினர்கள். அதன் பின்னரே குடியேற்றம் அமைதியாக நடைபெற்றது.

**வியாபார நிறுவனங்கள்**

ஆப்பிரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் ஆங்காங்கு வணிக நிலையங்களை நிறுவினர். இவை 17-ஆம் 18-ஆம் நூற்றாண்டுகளில் சென்னை, புதுச்சேரி, கடலூர், தரங்கம்பாடி, நாகப்பட்டினம் ஆகிய கடலோர நகரங்களிலும் நெல்லிக்குப்பம், இராணிப்பேட்டை போன்ற உள்நாட்டு ஊர்களிலும் வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்திய நிலையங்களைப் போன்றன. இவ்வாறு தமிழ் நாட்டில் வெள்ளைக்காரர் தொடங்கிய வணிக நிலையங்களுள் ஒன்றான பாரி கம்பெனி பல கோடி ரூபாய் வரவு செலவு உள்ள பெரிய தொழில் நிலையமாக இருப்பதுபோல, ஆப்பிரிக்காவில் வெள்ளையர் தொடங்கிய 50 கம்பெனிகள் ஆப்பிரிக்காவின் பொருளாதாரத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்ல நிலைக்கு வளர்ந்துள்ளன.

**மதப்பிரசாரம்**

தம் முன்னோரை வழிபடுவது என்ற தத்துவம் மட்டுமே ஆப்பிரிக்கரிடம் முன்னுளில் இருந்தது. அவர்களிடம் வெள்ளைக்காரர்கள் கிறித்தவ மதத்தைப் பரப்பினர். இதன் பயனுக ஆப்பிரிக்காவில் மதம் மாறியவர்கள் தொகை இரண்டு கோடியாகும். மதப்பிரசாரகர்களில் சிலர் சீரிய தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**வியாபார நிறுவனங்கள்**

**அரசியல் அதிகாரம் செலுத்துதல்**

1800 முதல் 1880 வரை அரசாங்க அதிகாரங்களும் வியாபார நிறுவனங்களின் மேலாளர்களாலேயே செலுத்தப்பட்டன. வேறு அரசாங்கம் இல்லாத

நிலையில், அவர்கள் வைத்ததுதான் சட்டமாக இருந்தது. இந்தியாவிலும் 1857 வரை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பெனி, பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கும்பெனி என்பன ஆட்சி செலுத்தி வந்தன; எனவே பழம் பெருமையில்லா ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடையே இவர்களது ஆட்சி நடைபெற்றதில் வியப்பொன்றுமில்லை.

### நேரடியான அரசாங்கம் அமைத்தல்

புதிய சிக்கல்களாலும் வணிக நிறுவனங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியின் விளைவாலும் ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவில் நேரடியான ஆட்சி மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அத்தகைய ஆட்சி அமையுமுன்னதாக, அந்தந்த நாடுகளுக்கு உரிய பகுதிகளின் எல்லைகள் வரையறுக்கப் பட வேண்டியதிருந்தது. அதற்காக, ஐ ரோ ப் பி ய வல்லரசுகள் 1884-இல் பெர்லினில் சமரசம் செய்து கொண்டதை முன்னரே குறிப்பிட்டோம்.

பெர்லின் உடன்பாட்டின் விளைவாக, ஆப்பிரிக்கா பங்கிடப்பட்டது. 1914-இல் அபிசீனியா, லைபீரியா தவிர ஆப்பிரிக்கா அனைத்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமைப்பட்டிருந்தது. 1953 வரை, ஆட்சி நிலை கீழ்க் கண்டவாறு இருந்தது.

(1) பிரான்சு: பிரெஞ்சுக்காரர்கள் வயப்பட்ட ஆப்பிரிக்காவின் பரப்பு 40 லட்சம் சதுரமைல்; அதாவது தமிழ்நாட்டைப் போல 80 பங்கு. பிரான்சைப்போல இருபது பங்கு. மொராக்கோ, டுனிசியா, அல்ஜீரியா, மடகாஸ்கர், பிரெஞ்சு ஈக்குவட்டோரியல் ஆப்பிரிக்கா, பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா, பிரெஞ்சு காமரூன், பிரெஞ்சு டோகோலண்டு என்பன பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துள் அடங்கிய ஆப்பிரிக்கப் பகுதிகளாகும்.

ஆப்பிரிக்காவில் வேறு எந்த வல்லரசையும்விட, பிரான்சுக்குத்தான் பரப்பளவு மிகுதி. இங்கு 5 கோடிப் பேர் வாழ்கின்றனர். இவர்களில் 12 லட்சம்பேர் 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரான்சிலிருந்து அல்ஜீரியாவில் குடியேறியவர்கள்.

(2) பிரிட்டன்: பிரான்சுக்கு அடுத்தபடி பிரிட்டனுக்குத்தான் ஆப்பிரிக்காவில் பெரும்பகுதி அடிமைப் பட்டிருந்தது. இப்பகுதியின் மக்கள் தொகை ஏழு கோடி; அதாவது பிரெஞ்சு ஆப்பிரிக்காவைவிடக் கூடுதல்.

பிரான்சுக்கு அந்த நாட்டைப்போல 20 பங்கு பரப்பு ஆப்பிரிக்காவில் இருந்ததுபோல, பிரிட்டனும் பிரிட்டனைப்போல 20 பங்கு பரப்பை ஆப்பிரிக்காவில் பிடித்துக்கொண்டிருந்தது. கோல்டுகோஸ்ட் (கானு), சீர்ராலியோன், நைஜீரியா, கினியா, உகண்டா, பஸூட்டோலந்து, புச்சுவானுலந்து, சுவாசிலந்து, காம்பியா, தங்கனீகா, நியாசாலந்து, தெற்கு ரொடீசியா, வடக்கு ரொடீசியா, ஜான்சிபார், பிரிட்டிஷ் சோமாலிலந்து, பிரிட்டிஷ் தோகாலாந்து, பிரிட்டிஷ் கமரூன்ஸ், தென்னுப்பிரிக்கா ஆகியவை பிரிட்டிஷ் ஆப்பிரிக்காவின் பகுதிகளாகும். இவற்றில் பல பகுதிகள் இப்போது உரிமை பெற்றுள்ளன.

(3) பெல்ஜியம்: ஆப்பிரிக்கக் கண்டத்தில் காங்கோவையும் ரூவாண்டா உருண்டியையும் பெல்ஜியம் பிடித்துக்கொண்டது.

நில அமைப்பால் காங்கோ, ஆப்பிரிக்காவின் இதயம் போன்றது. இது பரப்பளவில் பெல்ஜியத்தைப்போல நூறுபங்கு. மக்கள் தொகை ஒரு கோடியே 40 இலட்சம்

பெல்ஜியம் இந்த நாட்டை ஆண்ட கால முழுவதும் ஆட்சியுரிமை, ஐந்து பெரிய வணிக நிறுவனங் களிடமும் கித்தவ மதப்பிரசாரர்களிடமும் இருந்தது.

(4) இத்தாலி: கி. மு. 53-இலேயே இத்தாலி ஆப்பிரிக்காவின் வடகோடியிலுள்ள சில கடற்கரையூர் களைப் பிடித்துக் கொண்டிருந்தது. அணித்தே இருக்கும் அந்நாட்டுக்கு 'நாடு பிடிக்கும் ஆசை' இருப தாம் நூற்ருண்டில் ஏற்பட்டது.

முசோலினியின் ஆட்சியில் இத்தாலி 1936-இல் எத்தியோப்பியாவும் சோமாலிலந்தையும் பிடித்துக் கொண்டது. இரண்டாவது உலகப் போரில் இத்தாலி தோல்வியடைந்ததும், 1941-இல் எத்தி யோப்பியா மீண்டும் சுதந்தரம் அடைந்தது; சோமா லிலந்து (சர்வதேச சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க) பிரிட்டிஷாரின் 'தர்மகர்த்தா ஆட்சி'க்கு உட்பட்டது.

(5) ஜெர்மனி: தங்கனிகா, ருவாண்டா உருண்டி, கமரூனில் சில பகுதிகள், டோகோலந்து, தென்மேற்கு ஆப்பிரிக்கா ஆகியவை ஜெர்மானியரிடம் இருந்தன. இவை 1922-இல் முறையே பிரிட்டிஷ், பெல்ஜிய, பிரெஞ்சு ஆட்சிகளுக்கு சர்வதேச சங்கத்தால் மாற்றப்பட்டன. தெ. மே. ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டது.

(6) போர்த்துக்கல்: அங்கோலா, கினியாவில் ஒரு பகுதி, மொசாம்பிக்கே ஆகியவற்றைப் போர்த்துக்கல் பிடித்துக்கொண்டது. இவற்றின் பரப்பு, போர்த்துக் கலைப்போல இருபது பங்கு. இங்கு வாழும் மக்கள் ஒரு கோடிக்கும் மேற்பட்டவர் ஆவர். ஆப்பிரிக்காவில்— ஆகையால் உலகில் மிகவும் பிற்பட்டபகுதிகள் இவையே.

(7) ஸ்பெயின்: மொராக்கோவின் ஒரு பகுதியும் சகாராவின் ஒரு பகுதியும் இப்னி, ரியோ முனி, பெர் ஞன்டோ போ, கனரித்தீவு போன்ற சிறு பகுதிகளும் ஸ்பெயின் ஆட்சியில் உள்ளன. யானை போன்று பெரிய உருவமுள்ள ஆப்பிரிக்காவில் இந்தப் பகுதிகளின் பரப்பு சுண்டெலிக்குச் சமமானது. ஆனால் இவைகூடத் தமிழ் நாட்டைப்போல மூன்று பங்கு பரப்பு; மக்கள் தொகை 25 லட்சம்தான்.

மொராக்கோவின் மத்தியத்தரைக் கடற்கரையிலுள்ள செயூட்டா, மெலில்லா என்ற இரு சிறு பகுதிகளை ஸ்பெயின் தன் நாட்டின் நிலப்பரப்போடு சேர்ந்தவை என்று வற்புறுத்தி வருகிறது. இப்பகுதிகளின் பரப்பு 100 சதுரமைல்; அதாவது சென்னை நகரைப்போல இருமடங்கு. இவற்றில் ஒன்றரை லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறு வெளிநாடுகளைப் பங்கு போட்டுக் கொண்ட வல்லரசுகள் வெளிப்பார்வைக்கு நேசமாக இருந்தபோதிலும் அவர்களுக்குள் உட்பூசல்களும் மனக் கசப்புக்களும் நிலவின. அவையே முதல் உலகப் போர்க்கும், இரண்டாம் உலகப்போர்க்கும் வித்திட்டன.

### தங்கமும் வைரமும் தோண்டி எடுத்தல்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தங்கமும் வைரமும் தென் ஆப்பிரிக்கா, சீர்ராலியோன் முதலிய பகுதிகளிலும் வேறு சில பகுதிகளிலும் பெரிய அளவில் தோண்டப்பட்டன. இதனால் சில பகுதிகளில் பொருள் வளம் பெருகிற்று. ஐரோப்பியர் குடியேற்றம் மிகுதிப் பட்டது. வாணிகம் பல மடங்காயிற்று. வெள்ளைக் காரர்கள் முன்னைவிட ஆப்பிரிக்காவில் அக்கறை காட்டலாயினர்.

## போயர்ச் சண்டை

டச்சுக்காரர்கள் தென் ஆப்பிரிக்காவில் பெருந் தொகையாகக் குடியேறினர். அவர்கள் வழியினர் போயர் எனப்படுவர். வைரமும் தங்கமும் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அவர்கள் ஆங்கிலேயரை விரட்டி விட்டுத் தாங்களே தென் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி யான டிரான்ஸ்வாலை வைத்துக்கொள்ள விழைந்தனர். இதனால் வெள்ளைக்காரர்களுக்குள்ளேயே போர் ஏற் பட்டது. 1899-இல் தொடங்கிய இப்போரில் 1902-இல் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

## சுயஆட்சிக் கிளர்ச்சி

போயர்ச் சண்டையைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவில் கிளர்ச்சி நடைபெற்றது. பிறகு, அது இனக்கிளர்ச்சியாக மாறிற்று. காந்தியடிகள் அறப்போர் தொடங்கினர். அதன் பயனாக வெள்ளையர்—கறுப்பர், ஆளுவோர்—ஆளப்படுவோர் என்ற உணர்ச்சி ஆப் பிரிக்காவெங்கும் பரவியது. அந்த உணர்ச்சியை வெளிப் படுத்தும் வாய்ப்பு இரண்டாம் உலகப் போரால் ஏற்பட்டது.

மக்களின் மனநிலையை அறிந்த பிரிட்டிஷார் மட்டும் தங்கள் ஆட்சிப்பகுதிகள் சிலவற்றில் ஓரளவு சுய ஆட்சி நல்கினர்.

## கானாவின் சுதந்தரம்

வரலாற்றுப் பெருமையும், பிரிட்டிஷ் ஆட்சியில் ஓரளவு முன்னேற்றமும் அடைந்த நாடு கானா. அந் நாட்டினர் பலர், போர்ப்படைகளில் சேர்ந்து பணியாற்றி 1945 இறுதியில் தாயகம் சேர்ந்தனர். 1947வரை

# ஆப்பிரிக்கா — ஒரு கண்ணோட்டம்

| எண் | பகுதி | சுதந்தரம் பெற்ற காலம் | பரப்பளவு (சதுர மைல்) | மக்கள் தொகை மொத்தம் (லட்சம்) | மக்கள் தொகை ஆப்பிரிக்கர் அல்லாதார் (ஆயிரம்) | அரசியல் நிலை | குறிப்பு | தலைநகர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | செனிகல் | 20-6-1960 | 78,000 | 26 | 47 | பிரெஞ்சு கம்யூனிட்டிக்கு உட்பட்ட சுதந்தர நாடு. | சூடானும் செனிகலும் மாலி குடியரசு என்ற பெயரில் இணைந்து 1960 ஜூன் முதல் ஆகஸ்டுவரை இரண்டு மாதங்கள் ஒரே ஆட்சியில் இருந்தன. | டாக்கர் |
| 2. | மாலி குடியரசு | 20-6-1960 | 4,60,200 | 43 | 7 | சுதந்தர நாடு. | | பமாக்கோ |
| 3. | ஐவரி கோஸ்ட்டு | 7-8-1960 | 1,24,000 | 31 | 12 | சுதந்தர நாடு. | இந் நான்கும் 'கான் செய்ல் டெல் எண்டழன்ட்' என்ற பெயரில் பிரெஞ்சு ஆட்சியில் இருந்தன. | அபிட்ஜான் |
| 4. | அப்பர் வோல்ட்டா | 5-8-1960 | 1,22,000 | 40 | 3 | ,, | | ஔவா காடவ்கூ |
| 5. | டஹோமி | 1-8-1960 | 45,000 | 20 | 3 | ,, | | போர்ட்டோ நோவோ |
| 6. | நைஜர் | 3-8-1960 | 4,94,000 | 28 | 3 | ,, | | நியாமே |
| 7. | கபோன் | 17-8-1960 | 1,03,000 | 4 | 4 | பிரெஞ்சு கம்யூனிட்டிக்கு உட்பட்ட சுதந்திர நாடு. | | லிப்ர வில்லா |
| 8. | காங்கோ | 15-8-1960 | 1,32,000 | 8 | 10 | ,, | | பிராசா வில்லா |
| 9. | நடுஆப்பிரிக்கக் குடியரசு | 13-8-1960 | 1,90,000 | 12 | 6 | ,, | | பங்கூயி |
| 10. | சாடு | 11-8-1960 | 4,95,000 | 26 | 5 | ,, | | லாமிகோட்டை |
| 11. | டோகோ | 27-4-1960 | 21,200 | 11 | 2 | சுதந்தர நாடு. | இவ்விரண்டும் முன்னர் ஐ. நா. தர்மகர்த்தாப் பகுதிகளாகப் பிரெஞ்சு ஆட்சியில் இருந்தன. | லோம் |
| 12. | கமரூன் | 1-1-1960 | 1,43,500 | 32 | 16 | சுதந்தர நாடு. | | யாஉண்டி |
| 13. | கினியா | 28-9-1958 | 94,000 | 27 | 9 | சுதந்தர நாடு. | முன்னர் பிரெஞ்சு ஆட்சியில் இருந்தது. | கோனக்ரி |
| 14. | காம்பியா | | 4,000 | 3 | 0·5 | பிரிட்டிஷ் காலனி. | தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களே ஆட்சிக் குழுவில் இடம் பெறுகின்றனர். | பாதுர்ஸ்ட் |
| 15. | நைஜீரியா | 1-10-1960 | 3,39,200 | 353 | 16 | பிரிட்டிஷ்காமன்வெலத்துக்கு உட்பட்ட சுதந்தர நாடு. | | லாகோஸ் |
| 16. | சீர்ரா லியோன் | 27-4-1961 | 27,900 | 23 | 2 | பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்கு உட்பட்ட சுதந்தர நாடு. | | பிரீடவுன் |
| 17. | கானு | 6-3-1957 | 91,800 | 67 | 7 | பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்கு உட்பட்ட சுதந்தர நாடு. | 1960 ஜூலையில் இது ஒரு குடியரசு நாடாக ஆயிற்று. | அக்ரா |
| 18. | இப்னி | | 580 | 0·4 | — | ஸ்பானிஷ் மாநிலம். | | — |
| 19. | ஸ்பானிஷ் சஹாரா | | 1,02,700 | 0·1 | — | ,, | | எல்ஜயுன் |
| 20. | ரியூ முனி | | 10,000 | 2 | — | ,, | | பாட்டா |
| 21. | பெர்னாண்டோ போ | | 1,000 | 0·5 | — | ,, | | சாந்தா இசபெல் |
| 22. | லைபீரியா | 1947 | 43,000 | 15 | 1 | சுதந்தர நாடு. | | மன்ரோவியா |
| 23. | போர்த்துகீஸ் கினியா | | 13,900 | 5 | 0·2 | போர்த்துக்கல்லின் மாநிலம். | | பிஸ்ஸாவ் |
| 24. | அங்கோலா | | 4,81,350 | 45 | 110 | ,, | | லூவாண்டா |
| 25. | தென்மேற்கு ஆப்பிரிக்கா | | 3,17,700 | 4 | 50 | ஜெர்மன் ஆட்சியிலிருந்து: 1920-இல் தென் ஆப்பிரிக்கா இப்பகுதியைத் தன் ஆட்சிக்குள் வைத்துக்கொண்டது. | இது சர்வதேச சங்கத்தின் தர்மகர்த்தாப் பகுதியாக இருந்தது. | விண்ட் ஹோயக் |
| 26. | மொராக்கோ | 2-3-1956 | 1,71,000 | 105 | 350 | சுதந்தர நாடு. | முன்னர், ஒரு பகுதி பிரெஞ்சு ஆட்சியிலும்ஒரு பகுதி ஸ்பானிஷ் ஆட்சியிலும் இருந்தது. | ராயாட் |
| 27. | மாரிட்டேனியா | 28-11-1960 | 4,30,000 | 7·5 | 2 | சுதந்தர நாடு. | | நவ்வாக் சோட் |
| 28. | டூனிசியா | 20-3-1956 | 48,300 | 39 | 250 | சுதந்தர நாடு. | முன்னர், பிரெஞ்சு, ஆட்சியில் 'புரடக்டரேட்' நாடாக இருந்தது. | டூனிஸ் |
| 29. | அல்ஜீரியாவும் பிரெஞ்சு சஹாராவும் | | 8,50,000 | 100 | 1200 | பிரெஞ்சுக் குடியரசின் பகுதிகள். | | ஆல்ஜியர்ஸி |
| 30. | லிப்யா | 22-12-1951 | 6,79,400 | 14 | — | சுதந்தர நாடு. | இத்தாலியக் காலனியாக இருந்து 1945 முதல் 1951 வரை பிரிட்டனும், பிரான்சும் கூட்டாக ஆட்சி நடத்தின. | திரிப் போலி |
| 31. | ஐக்கிய அரபுக் குடியரசு (எகிப்து) | 1922 | 3,86,100 | 250 | — | சுதந்தர நாடு. | | கெய்ரோ |
| 32. | சூடன் | 1-1-1956 | 9,67,500 | 114 | — | சுதந்தர நாடு. | 1956 வரை இங்கிலாந்தும் எகிப்தும் கூட்டாட்சி நடத்தின. | கார்ட்டூம் |
| 33. | சோமலி குடியரசு | 1-7-1960 | 2,46,200 | 2C | 33 | சுதந்தர நாடு. | இத்தாலிய ஆட்சியிலிருந்து பிறகு ஐக்கிய நாடுகளால் பிரிட்டிஷ் பாதுகாப்பு ஆட்சியில் வைக்கப் பட்டிருந்தது. | மொகடிசு |
| 34. | பிரெஞ்சு சோமாலிலந்து | | 8,900 | 0'67 | 4 | பிரெஞ்சுக் குடியரசின் கடல்கடந்த பகுதி. | | ஜிபவுட்டி |
| 5. | எத்தியோப்பியா (எரீட்ரியவும் சேர்ந்தது) | | 4,63,000 | 210 | — | கி. மு. 200 முதல் சுதந்தர நாடு. | 9 ஆண்டுகள் இத்தாலியின் ஆட்சியில் இருந்தது. | ஆடிஸ் அபாபா |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 36. | உகண்டா | | 94,000 | 65 | 88 | பிரிட்டிஷ் புரடக்டரேட்டு. | 1961-இல் ஓரளவு அரசியல் சீர்திருத்தம் ஏற்பட்டது. | எண்டெப் |
| 37. | கின்யா | | 2,25,000 | 65 | 279 | ,, | ,, | நைரோபி |
| 38. | தங்கனீகா | 1961 | 3,62,700 | 91 | 134 | (ஐ. நா.வுக்காக) ,, | ,, | டார் எஸ்சலாம் |
| 39. | ஜான்சிபார் | | 1,000 | 3 | 70 | பிரிட்டிஷ் புரடக்டரேட்டு. | ,, | ஜான்சி பாரி |
| 40. | ருவாண்டா உருண்டி | | 21,000 | 46 | 2 | (ஐ. நா.வுக்காக) பெல்ஜியர் ஆட்சி. | 1962-இல் சுதந்திரம் வழங்கப்பட்டது. | உசும்புரா |
| 41. | ரொடீசியா-நியாசாலந்து பெடரேசன் | | 4,87,600 | 82 | 350 | கூட்டாட்சிக்குப் பல அதிகாரங்கள் உள்ளன. | | |
| | தென் ரொடீசியா | | 1,50,300 | 30 | 243 | பிரிட்டிஷ் காலனி | 1961-இல் அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. | சாலிஸ்பரி |
| | வடரொடீசியா | | 2,88,100 | 24 | 85 | பிரிட்டிஷ் புரடக்டரேட்டு. | ,, | லுசாக்கா |
| | நியாசாலந்து | | 49,200 | 28 | 21 | ,, | ,, | ஜோம்பா |
| 42. | புச்சுவானலந்து | | 2,75,000 | 3 | 4 | பிரிட்டிஷ் புரடக்டரேட்டு | | மேப் கிங் |
| 43. | பஸுட்டோலந்து | | 11,700 | 7 | 3 | ,, | | மசெரோ |
| 44. | சுவாசிலந்து | | 6,700 | 3 | 7 | ,, | | மபாபானு |
| 45. | தென் ஆப்பிரிக்கா | 1910 | 4,72,700 | 150 | 4812 | சுதந்தர நாடு. | 1961 வரை பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் உறுப்பு நாடாக இருந்தது. பிறகு விலகிக்கொண்டு (விலக்கப்பட்டு), குடியரசாயிறறு. | கேப்டவுன், பிரிட்டோரியா |
| 46. | மொசாம்பிக்கே | | 3,02,300 | 62 | 70 | போர்த்துகளின் கடல் கடந்த மாநிலம். | | லோரன்சோ மார்க்குவேஸ் |
| 47. | மலகசே குடியரசு | 26-6-1960 | 2,27,800 | 52 | 74 | பிரெஞ்சுக் கம்யூனிட்டிக்குட்பட்ட சுதந்தர நாடு. | | தானனுரிவே |
| 48. | கமரூன்ஸ் | 1-1-1960 | 34,100 | 16 | 1 | ஐ. நா. வுக்காக, பிரிட்டிஷ் புரடக்டரேட்டு. | வருங்கால அரசியல் நிலை ஐ. நா. அவையினரால் முடிவு செய்யப்படும். | டிக்கோ |
| 49. | காங்கோ | 15-8-1960 | 9,05,000 | 137 | 60 | சுதந்தர நாடு. | பெல்ஜியம் ஆட்சி சீர்குலைந்த பிறகு, ஐ. நா. படைகள் இங்கு இருந்து வருகின்றன. 50,000 வெள்ளையர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். | லியோபோல்டு வில்லி |

TAMIL NADU ARCHIVES

570

அமைதியாகவும் அடுத்த 10 ஆண்டுகளுக்குப் புரட்சியாகவும் கிளர்ச்சி செய்து கானு மக்கள் விடுதலே வேண்டினர். 1957-இல் கானு சுதந்தரம் பெற்றது. கானுவின் சுதந்தரம் ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலே வரலாற்றின் விடிவெள்ளியாகும். ஏனைய ஆப்பிரிக்க நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் ஐரோப்பிய அரசுகளுக்கு எச்சரிக்கையாகவும் அது அமைந்தது.

## வாழும் மக்கள்

ஆப்பிரிக்காவில் வாழும் மக்கள் ஆப்பிரிக்கர், ஆசியாக்காரர், வெள்ளேயர் என்ற மூன்று பிரிவினர் ஆவர்.

### ஆப்பிரிக்கர்

ஆப்பிரிக்கர் என்ற சொல் ஆப்பிரிக்காவையே தாயகமாக உள்ளவர்களும் பல நூற்றுண்டுகளாக ஆப்பிரிக்காவிலேயே வாழ்ந்து வருபவர்களும் ஆகியவர் களேக் குறிக்கும். ஆனுல் உலக வழக்கில், வட ஆப்பிரிக் காவிலுள்ள முஸ்லிம்களே—எகிப்தியர்கள், மொராக்கோ நாட்டினர் போன்ற பலரை—இச்சொல் குறிப்பதில்லே; மேற்கு ஆப்பிரிக்காவிலும் சகாராவுக்குத் தெற்கேயும் வாழும் நல்ல கறுப்பர்களேயே சுட்டுகிறது. இவர்கள் தொகை 17 கோடி இருக்கலாம்.

இந்த ஆப்பிரிக்கர்களில் பெரும்பாலோர் நீக் ரோக்கள் ஆவர். இவர்களேத் தவிர ஹமைட்டு, பிக்மி, புஷ்மென், காட்டென் டாட்ஸ், பெர்பெர், குஷிடிக் செமிட்டிக், சூடானிக், ஜுலூ என்னும் 800 தொல் மரபினங்கள் (Tribes) ஆப்பிரிக்கருள் உள்ளன.

ஒவ்வொரு தொல்மரபினத்துக்கும் ஒரு தலைவன் உண்டு, (Tribal Chief). அந்த இனத்தவர் அனைவரும் அத் தலைவனுக்குக் கட்டுப்பட்டவர்கள். கிளையினத் தலைவர் களுக்கு ஓரளவு அரசியல் அதிகாரமும் இருந்து வருவது ஆப்பிரிக்காவின் வாழ்க்கை முறையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.





வாட்டசாட்டமான உடற்கட்டு, ஓரளவு உயரமான தோற்றம், தடித்த உதடு, அவர்களுக்கே உரிய தலை முடித் தோற்றம், நீண்டு தொங்கும் பகுதிகளையுடைய முகம், கறுமையான நிறம்—இவை இவர்களின் பொதுத் தன்மை. பெண்கள் பிறந்த மேனியராகவே உழுவது, விதைப்பது, நாத்துப்பிடுங்குவது முதலிய வேளாண்மை வேலைகளைச் செய்து வந்தனர். மகசூல் பெருகவும் மகளிர் உடல்நலம் பெறவும் இறையருளைப் பெரும் முறையாக இவர்கள் கருதி வந்திருக்கின்றனர். மாத விடாய்க் காலத்திலும் கருவுற்றிருக்கும் போதும் பெண்கள் வேளாண்மை வேலை செய்யக்கூடாது என்ற நியதியை இவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். பல மனைவியரை மணப்பது இவர்களுடைய இயல்பு. எத்துணை வறுமை நிலையினரும்கூட, ஒவ்வொரு மனைவிக்கும் தனி

வீடு கட்டிக்கொடுப்பர். வீடென்பது மூங்கில் மரமும் கூரைகளும் உடைய சிறு குடிசையே.

முன்னோர்களை வழிபடுவது இவர்கள் மரபு. ஆவியுலகத்தில் இவர்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. மந்திரவாதிகள் வாயிலாக ஆவியுலகுடன் தொடர்புகொள்ள இயலுமென இவர்கள் இன்றளவும் நம்புகின்றனர்.

மண், மரம், கல் ஆகியவற்றால் அமைந்த விக்கிரங்கங்களையும் இவர்கள் வழிபடுவர்; அவற்றுக்கு ஆடு மாடு கோழி பன்றி ஆகியவற்றைப் பலியாகக் கொடுப்பார்கள். இடி, கடல்கோள், பேய் பிசாசுகளின் தொல்லைகள் போன்ற நிகழ்ச்சிகளால் இவர்களுக்குத் தீங்கு நேரிட்டமையால், இடிமுழக்கக் கடவுளாகக் கருதப்படும் 'சங்கு' கடல் தேவனான 'கொங்', பிசாசுகளின் காவலனான 'எலிபார்' ஆகிய விக்கிரகங்களிடம் இவர்களுக்குப் பற்றுதல் மிகுதி. ஏவல், சூனியம் ஆகியவற்றிலும் இவர்களுக்குப் பற்றுதல் இருந்து வருகிறது. இவர்களிடம் மலிந்து காணப்படும் மஞ்சள் காயல், மலேரியா, குட்டம், உடலில் சிவப்புப் புள்ளிகள் விழுந்து அதனால் புண் ஏற்பட்டுப் பரவும் தொத்துநோய் (Yaws) போன்ற நோய்கள் ஏவலால் ஏற்படுவனவே என்பர். முன்னோர்களைப் புதைத்துவைக்கும் வழக்கத்தை இவர்கள் கைக்கொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் தங்களுடைய நிலங்களிலேயே தம் முன்னோரைப் புதைத்து விடுவர். புதைத்ததும், நிலம் புதைக்கப்பட்டவராகிய முன்னோரின் உடைமை ஆகிவிடுகிறதாம். இதனால் நிலத்தை விற்பது என்பதே ஆப்பிரிக்கர்களிடம் இல்லை. நிலத்தையும் ஆடு மாடுகளையும் சீர்தனமாக வழங்குவர்.

இவை தவிர, இவர்கள் அறிந்த சொத்து 'யானைத் தந்தம்.' இது எங்கேயாவது கிடைத்தால்,

உடனே புதைத்து வைத்துவிடுவர். உணவுக்காக மீன் பிடிப்பதும் வேட்டையாடுவதும் இவர்களுடைய பழக்கங்களாக உள்ளன. உணவுக்காக மனிதர்களை வேட்டையாடிச் சிறந்த மனிதர்களின் இறைச்சியை உண்ணும் பழக்கம் பல நூற்றுண்டுகளுக்குமுன் இவர்களிடம் நிலவி வந்தது. பொதுவாக, இவர்கள் ஓரளவு சோம்பேறிகள். வேலையின்மையும் வாய்ப்பின்மையுமே இவர்களுடைய சோம்பலுக்குக் காரணம்.

மேலை நாடுகளின் தொடர்பாலும் உலகெங்கும் ஏற்பட்டு வரும் மாறுதல்களாலும் ஆப்பிரிக்கர்களின் பழைய நாகரிகம் விரைந்து அழிந்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் ஐரோப்பியர் அமெரிக்கர் ஆகியோருடைய பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் சட்டதிட்டங்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். புதிய நாகரிகம் முற்றிலும் பரவாமல் பழமைப் பழக்கவழக்கங்கள் அடியோடு அழியாமலும் உள்ள இக்காலத்திலும், ஆப்பிரிக்கர் அதிசயக் காட்சி தருகிறார்கள். இரண்டும் கெட்டான் நிலையில் கோடிக் கணக்கானவர் வாழ்கின்றனர். தமிழ் நாட்டிலும்கூட, சாத்திரச் சடங்குகளைச் சற்றும் கைவிடாத கோத்திரங்களில் கால்சட்டையும் கழுத்துப் பட்டையும் அணிந்த மணமக்களைப் பார்க்கலாம். இவ்வாறே ஆப்பிரிக்கக் கிளையினத்தலைவர் ஒருவர் உடையிலும் உள்ளத்திலும் ஊறிவிட்ட கருத்துக்கள் இருந்தாலும், சைக்கிள் ஓட்டுவதை அடுத்த பக்கத்தில் காண்க.

மத அடிப்படையில், இவர்களில் 2 கோடிப் பேர் கிறித்தவர்களாக உள்ளனர். ஏனையோர் அனைவருமே மூதாதையர் வழிபாடு என்னும் மதத்தை மட்டுமே கடைப்பிடிக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இஸ்லாமிய மதம் பரவி வருகிறது. மாலி, மொராக்கோ,

வட நைஜீரியா, எகிப்து ஆகியநாடுகளில் முஸ்லிம்கள் சில கோடிப் பேர் இருப்பதாலும் அங்கு முஸ்லிம் ஆட்சி நடப்பதாலும் இஸ்லாமிய மதத்தைப் பரப்புவது எளி



தாக இருக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்காவிலும் முஸ்லிம்கள் பெருந்தொகையாக உள்ளனர். இந்தோனேசியா. மலாசியா, பாகிஸ்தான், சிரியா, லெபனன், அரபுநாடுகள் ஆகியவற்றிலுள்ள முஸ்லிம்கள் விடுதலை யடைந்த தங்கள் நாட்டைப்பற்றிய செய்திகளைக் கூறி விடுதலை இயக்கத்துக்கு வித்திட்டு, இஸ்லாமிய மதத்தையும் பரப்பி வருகின்றனர்.

கல்வித் துறையில் ஆப்பிரிக்கா—குறிப்பாக ஆப்பிரிக்கக் கறுப்பர்—பின்தங்கியுள்ளனர். படித்தவர் தொகை 100க்கு 20 தான். இது 1957-இல் இருந்த நிலை. விரைந்த மாறுதல்களாகும் அரசியல் எழுச்சியாலும் படித்தவர் தொகை மிகுதியாகிவிடும். ஆனால் இதற்கு இடையூருக இருப்பது மொழிப் பிரச்சினை.

ஆங்கிலமும் பிரெஞ்சும் ஆட்சி மொழிகளாக ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியில் உள்ளன. தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலமும் ஆப்பிரிக்கான்ஸ் (17-ஆம் நூற்றாண்டு டச்சு மொழியோடு, ஆப்பிரிக்க மொழிகளின் சொற்கள் கலந்தது)என்ற மொழியும் ஆட்சி மொழிகளாக உள்ளன. கிழக்காப்பிரிக்காவில் சுவாஹிலி மொழியைப் பெரும்பாலோர் பேசுகின்றனர். எகிப்துமுதலியவட ஆப்பிரிக்க நாடுகளில் அரபு மொழியும் எத்தியோப்பியாவில் அர்மார்ஹிக் மொழியும் வழங்கி வருகின்றன.

ஆப்பிரிக்கர் பண்டு, உம்புண்டு, சூடானிக் நீக்ரோ, ஹமாடிக், செமடிக், கோய்சான் போன்ற பல மொழிகளைப் பேசி வருகின்றனர். சூடானிக் மொழி ஏழரைக் கோடி பேராலும் பண்டு (ஸ்வாஹிலி, ஜூலு என்னும் கிளைமொழிகள் உட்பட) ஐந்து கோடிப் பேராலும் ஹௌஷா ஒரு கோடிப் பேராலும் பெர்பெர் 60 லட்சம் பேராலும் பேசப்படுகின்றன. பண்டு என்பது திராவிட மொழிகள் என்பதுபோல ஒரு மொழிகுடும்பம், ஆங்கிலத்தில் இதை 'Bantu' என்பர். இசையொலியை ஒத்த ஓசை நயத்துடன் கூடிய இம்மொழிகள். தமிழ்த் தொடர்புடையன என்றும், 'பண்டு' என்பதே தமிழ்ச் சொல் என்றும் இசையாராம்ச்சியாளரும் தமிழ்ப் பேராசிரியருமான விபுலானந்த அடிகள் கூறியுள்ளார்கள்.

எழுத்து வடிவம் சில மொழிகளுக்கு மட்டும் ஏற்பட்டு வருகிறது. இலத்தீன் எழுத்து முறையும் அரபு எழுத்து முறையும் பரவி வருகின்றன. ஆப்பிரிக்க மொழிகளில் இலக்கியம் கிடையாது, நாட்டுப் பாடல்களும் பழமொழிகளும் விடுகதைகளும் உண்டு.

'சோம்பேறி சுருக்கமாக உண்பான்'

'ஆத்திரப்பட்டு எய்தால் அம்பு குறியை அடையாது'

என்பன ஆப்பிரிக்கப் பழமொழிகளில் சில.

**ஆசியாக்காரர்**

வெள்ளையர் தவிர ஏனைய வெளி நாட்டினரில் இந்தியர்களே மிகவும் முக்கியமானவர் ஆவர். இவர்களுக்கு அடுத்தபடி, ஒரு லட்சம் பாக்கிஸ்தானியர் உள்ளனர். பாக்கிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு 'இந்தியரும் பாக்கிஸ்தானியரும்' என்று குறிப்பிட 'ஆசியாக்காரர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மலாசியாவிருந்து வந்தவர்களின் வழித்தோன்றல்கள் 40,000 பேரும் சீனர் சில ஆயிரம் பேரும் ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர்,

**வெள்ளையர்**

வெள்ளைக்காரர்கள் தென்னப்பிரிக்காவில் 30லட்சம் பேரும் ஏனைய நாடுகளிலெல்லாம் சேர்ந்து மற்றொரு 30 லட்சம் பேரும் உள்ளனர். தென்னப்பிரிக்காவில் வாழும் வெள்ளையரில் பெரும்பாலோர் ஆப்பிரிக்கானர் அல்லது போயர் எனப்படுவர்; இவர்கள் ஹாலந்து நாட்டிலிருந்து தென் ஆப்பிரிக்காவில் 250 ஆண்டுகட்கு முன் குடியேறியவர்களின் வழித்தோன்றல்கள். அந்த நாடே தங்களது என்ற உரிமை கொண்டாடுபவர்கள்.

## இந்தியாவும் ஆப்பிரிக்காவும்

உலகில் வேறு எந்த நாட்டையும்விட ஆப்பிரிக்கர்களுக்கு இந்தியாவுடன் உறவு மிகுதி. குறிப்பாக, தென்னிந்தியாவுக்கும் இவர்களுக்கும் 4000 ஆண்டுகட்குமுன் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்று மனிதர்களின் ஆதி வரலாறு பற்றி ஆராய்வோர் கருதுகின்றனர்.

மறைந்துவிட்ட இலமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதியாகத் தென்னுப்பிரிக்கா இருந்திருக்கக்கூடும் என்பதும் பலருடைய உறுதியான கருத்தாகும்.

இது எவ்வாறிருப்பினும், இன்றைய ஆப்பிரிக்காவை 15-நூம் நூற்ருண்டில் போர்த்துக்கீசியர் காண்பதற்குக் காரணம் இந்தியாதான். இந்தியாவுக்குப் போகவேண்டுமென்ற ஆசையே அவர்களுடைய பயணத்துக்கு வித்திட்டது. இந்தியப் பெருங்கடல் தென் அட்லாண்டிக்குடன் கலக்குமிடத்திலுள்ள முனையை அடைந்ததும் 'இனி இந்தியாவைக்கண்டு விடுவோம்' என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது; அதனுல் 'நன்னம்பிக்கைமுனை' என்று அந்த இடத்திற்குப் பெயரிட்டனர்.

பிரிட்டிஷார் ஆப்பிரிக்காவையும் இந்தியாவையும் ஆண்டபோது நேட்டாலிலுள்ள சுரங்கங்களிலும்தோட்டங்களிலும் வேலை செய்ய 1860-இலும், உகண்டாவில் இரயில் பாதைபோட 1896-இலும் கப்பல் கப்பலாக இந்தியர்களை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினர். இவ்வாறு சென்ற இந்தியர்களின் வழித்தோன்றல்கள் இன்றைய ஆப்பிரிக்காவில்—குறிப்பாக, பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த பகுதிகளில்—பெருந்தொகையினராக வாழ்கின்றனர்.

ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர் தொகை ஏழு லட்சத்துக்கு மேல் இருக்கும். தென் ஆப்பிரிக்காவில் மூன்று லட்சம் பேர், மல்கேச (மடகாஸ்கர்) யில் இரண்டு லட்சம், கினியாவில் ஒன்றரை லட்சம் பேர், தங்கனீகாவில் 70,000 பேர், உகண்டாவில் 50,000 பேர், மொசாம்பிக்கேயில் 30,000 பேர், ரொடீசியாவிலும் நியாசாலந்திலும் 15,000 பேர், ஜான்சிபாரில் 15,000 - இவ்வாறு இவர்கள் பரந்து கிடக்கின்றனர். பிற பகுதிகளிலும் இவர்கள் உள்ளனர். வட மேற்கு ஆப்பிரிக்கக் கடற்

கரையிலுள்ள சின்னஞ்சிறு பகுதியான ஸ்பானிஷ் கானரி தீவில்கூட மார்வாடி வியாபாரிகள் இருப்பதை அங்கே சென்ற என் நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இவ்வாறு சென்றிருக்கும் இந்தியருள் தமிழர், சூசராத்தியர், பஞ்சாபியர் ஆகிய மூன்று மொழியினர் முக்கியமானவர்கள் ஆவர். ஆகாகானின் சீடர்களான இஸ்மாயிலி கோஜா முஸ்லிம்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தொழிலாளர், வணிகர் தொழில் நுணுக்க வேலைகளில் ஈடுபடுபவர் என ஆப்பிரிக்கா வாழ் இந்தியர் மூவகையினர். தொழிலாளர் நிலையாக ஆப்பிரிக்காவில் இருப்பவர்கள். வணிகர்கள் லாபத்தை இந்தியாவுக்கு அனுப்பி விடுபவர்கள். தொழில் நுணுக்க வேலைகளைச் செய்பவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டும் அங்கே தங்கியிருப்பவர்கள். தொழிலாளர் முன்னர் இந்தியாவிலிருந்து சென்றலர்களின் வழித்தோன்றல்கள்; இவர்கள் இந்தியாவில் பிறக்கவில்லை; இந்தியாவைப் பார்த்ததுமில்லை; ஆனால் வாழ்வில் ஒரு முறையேனும் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடையவர்கள். 1950க்குப் பிறகு தொழில் நுணுக்கத் துறையில் இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பொறியியல் அறிஞர், கல்லூரி ஆசிரியர்கள், பொருளாதார அறிஞர் ஆகியோர் சென்றுள்ளனர். ஐ. நா. அவையின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய அரசாங்கம், நம் படை வீரர்களைக் காங்கோவுக்கு அனுப்பியிருக்கிறது.

இந்தியர் நடத்தும் வங்கிகளும் இன்சூரன்சுக் கம்பெனிகளும் உணவு விடுதிகளும் ஆப்பிரிக்காவில் பலநாடுகளில் நன்கு நடைபெற்று வருகின்றன. பெரிய அளவில் வாணிபம் செய்யும் இந்தியச் செல்வர்களும் ஆப்பிரிக்காவில் உள்ளனர். சில நகரங்களில் சீக்கியர், பஸ் போக்குவரத்தை நடத்தி வருகின்றனர். கிழக்கு ஆப்பிரிக்காவில்

சின்னஞ்சிறு ஊர்களிலும் இந்தியர்களைக் காணலாம். வெற்றிலை பாக்குக் கடைகளைக் கூட இவர்கள் நடத்தி வருகின்றனர்.

கோவாவிலிருந்து குடியேறிய இந்தியர்கள் தையற் கடைகளையும் பஞ்சாபு சீக்கியர்கள் சைக்கிள் கடைகளையும் நடத்துகின்றனர். சில நகரங்கள் ஆமதாபாத், பரோடா போன்று இந்திய நகரங்களாகவே ஆப்பிரிக்காவில் காட்சி தருகின்றன. அரசாங்க அலுவலகங்களிலும் குறிப்பாக அஞ்சல் நிலையங்களிலும் இந்திய ஊழியர் தொகை பெரிது. சட்டசபைகளிலும் நகராண்மைக் கழகங்களிலும் பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்தியர்களுக்குத் தனித்தொகுதிகள் ஏற்பட்டு, இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவற்ருல் இந்தியரிடம் ஆப்பிரிக்கர்களுக்கு நம்பிக்கை குறைந்தது. இந்தியர்களில் பலர் தாங்கள் ஆப்பிரிக்கரைவிட நாகரிகமும் அறிவும் மிக்கவர்கள் என்ற செருக்கு மனப்பான்மை படைத்திருந்தனர். ஆப்பிரிக்கரைப் பார்த்ததுமே தங்கள் மனத்தில் அருவறுப்புத் தோன்றுவதாகக் கூறி, சில சமயம் வெள்ளையருடன் சேர்ந்து கொண்டனர். இதன் விளைவாக ஆப்பிரிக்கர், ஆட்சியாளர்களுக்கெதிராகக் கலகம் செய்தபோது, அவற்றை அடக்குவதற்கு அமைக்கப்பட்ட படைகளிலும் இந்தியர் சிலர் சேர்ந்து கொண்டனர். இதனுல் மனக்கசப்பு வளர்ந்தது. 'உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி' என்ற நிலையில் இந்தியர்கள் ஆட்சியாளருடைய மதிப்பைப் பெற இயலாமலும் நாட்டு மக்களுடைய நட்பை இழந்தும் அல்லற் பட்டனர்.

*1890*–இல் நேட்டாலுக்குப்போய்ச்சேர்ந்த காந்தியடிகள் தொடங்கிய கிளர்ச்சியும் விடுதலை உணர்வும் இரண்டாம்உலகப்போருக்குப்பின் ஆப்பிரிக்கரிடம்வேரூன்றின.

இந்திய நாடு 1947-ல் விடுதலை அடைந்து. ஆப்பிரிக்கரின் எழுச்சிக்கு வலிவும் பொலிவும் அளித்தது. உலகப் பெருந்தலைவர்களில் ஆப்பிரிக்க மக்களின் குரலை வெளிப்படுத்துபவர் ஜவஹர்லால் நேரு தான் என்பதை 'கெய்ரோ முதல் கேப்' வரையுள்ள மக்களும் அவர்கள் தலைவர்களும் ஐயப்பாடின்றி அறிந்து கொண்டனர்.

ஆப்பிரிக்காவாழ் இந்தியர்களுக்கு 1952-இல் நேரு நல்லறிவு புகட்டினார். அதன் பயனாக, ஆப்பிரிக்காவில் தொழில் செய்யும் இந்திய வணிகர் பலர் தங்கள் தொழில்களில் ஆப்பிரிக்ரைப் பங்காளிகளாகச் சேர்த்துக் கொண்டனர்.

> ''ஆப்பிரிக்கர்களுக்கு விரோதமாக நீங்கள் விரும்பும் எத்தகைய வேண்டுகோளுக்கும் இந்திய அரசாங்கம் செவி சாய்க்காது. நீங்கள் அவர்களுடைய நாட்டில் விருந்தினராக வாழ்கிறீர்கள். அவர்களுடன் இரண்டறக் கலந்து விடுங்கள். அது இயலாவிட்டால், இந்தியாவுக்குத் திரும்பிவிடுங்கள்''

என்று 1952-இல் நேரு ஆப்பிரிக்காவாழ் இந்தியருக்குத் தெளிவாகச் சொன்னார். இச்செய்தியைப் பரப்பவும் இந்தியருக்கும் ஆப்பிரிக்கருக்கும் இடையே நல்லுறவை வலுப்படுத்தவும் ஆப்பிரிக்காவெங்கும் தூதர் அலுவலகங்கள் தொடங்கப்பட்டன. இந்தியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்குமிடையே போக்குவரத்து வசதிகளைப் பெருக்க, இந்திய அரசாங்கம் கப்பல் நிறுவனம் ஏற்படுத்திற்று. கெய்ரோவுக்கும் நைரோபிக்கும் 'ஏர் இந்தியா' விமான சேவை விரிவுபடுத்தப் பட்டது. இந்திய வானொலியில் ஆப்பிரிக்க மொழிகளிலும் ஒலி பரப்புக்கள் செய்யமுயற்சி தொடங்கப்பெற்றது. ஆசிய ஆப்பிரிக்கமா நாடு பாண்டுங்

கில் கூட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் அவையில் ஆப்பிரிக்கரின் கட்சியை இந்தியா இடையருது இயம்பி வந்திருக்கிறது.

ஆப்பிரிக்க மாணவர்கள் இந்தியாவில் கல்வி பயிலுவதற்கு இந்திய அரசாங்கம் வசதி செய்துகொடுத்திருக்கிறது. சில நூறு ஆப்பிரிக்கர் இந்தியப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று வருகின்றனர். சென்னைக் கல்லூரிகளிலும் சிலர் பயில்கின்றனர்.

டில்லிப் பல்கலைக்கழகத்தில் ஆப்பிரிக்காவைப்பற்றிய ஆராய்ச்சித்துறை (Department of African Studies) 1954-இல் தொடங்கப்பெற்றது. ஆப்பிரிக்காவைப் பற்றி நன்கு அறிந்த இந்தியர்களும் வெளிநாட்டினரும் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் ஆப்பிரிக்காவின் அரசியல் நிலை, வரலாறு, பண்பாடு, பூகோளம், சமுதாய நிலை ஆகியவற்றைப் பற்றி விரிவுரைகளை மாணவர்க்கு (சிலசமயம் பொது மக்களுக்கும்) நிகழ்த்துகின்றனர். இப்பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டத்துக்கு மேற்கண்ட பாடங்களில் ஒன்றைப் படிக்கும் மாணவர்கள் அப்பாடத்தில் ஆப்பிரிக்காவைப்பற்றியும் ஒரு தேர்வு எழுதவேண்டும்.

ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் எவ்வளவோ ஆதரவு காட்டியும், இந்தியப் பொதுமக்கள் அவர்களை அன்புடன் தம் இல்லங்களுக்கு அழைப்பது அரிதாக இருக்கிறது. இதனுல், இந்தியாவிலிருந்து தாயகம் செல்லும்போது இவர்கள் நல்லெண்ணத்துடன் செல்லுவதில்லை. இந்த நிலைக்கு ஒரு முடிவு காணவும் விடுமுறை நாட்களில் இந்த மாணவர்கள் இந்தியாவைச்

சுற்றிப்பார்க்கவும் இந்திய நண்பர்களை உண்டாக்கிக் கொள்ளவும் இந்திய அரசாங்கத்துக் கல்வி- கலைத்துறை அமைச்சரவைகள் ஆவன செய்து வருகின்றன.

## பொருளாதார நிலை

இனி ஆப்பிரிக்காவின் பொருளாதார நிலையைச் சற்று கூறுவோம்.

### வேளாண்மை

ஆப்பிரிக்காவின் பழமையான தொழில் வேளாண்மை. மிகப் பெரும்பாலான மக்கள் இதனாலேயே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஆனால் நிலத்தில் 10-இல் ஒரு பங்குதான் வேளாண்மைக்கு ஏற்றதாக இருக்கிறது. அவற்றுள் வளமான நிலங்களை வெள்ளையர்கள் எடுத்துக்கொண்டுவிட்டனர்.

நிலப் பிரச்சினை ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆப்பிரிக்கரிடையே கம்யூனிசத்தைப் பரப்பி வருவதும் வெள்ளையர்—கறுப்பர் இனப் போராட்டத்துக்கு அடிப்படைக் காரணமாக இருப்பதும் நில உடைமைத் தகராறுதான். மதப் பிரசாரகர்களால் கிறித்தவம் பரப்பப்பட்டிருப்பது பற்றி, புரட்சிக்காரர்கள் ஆப்பிரிக்கரிடம் செய்துவரும் பிரசாரம் பின் வருமாறு:

> ''வெள்ளைக்காரர்கள் இங்கு வந்தபோது நிலம் உங்களிடம் இருந்தது. விவிலிய நூல் அவர்களிடம் இருந்தது. இப்போது விவிலிய நூல் உங்களிடம் உளது; நிலம் அவர்களிடம் இருக்கிறது.''

நிலத்தின் தரக்குறைவாலும் ஆப்பிரிக்கரின் சோம்பலாலும் அவர்களிடம் உள்ள நிலங்களில் மகசூல் குறைவாகவே கிடைக்கிறது.

வெள்ளையர் நிலங்களை வாங்கக்கூடாது, வைத்துக் கொள்ளவும்கூடாது என்ற சட்டம் சுதந்தர கானுவில் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நிலப்பரப்பு மிகுதியாலும் மக்கள் தொகைக் குறைவாலும் சில பொருள்களின் உற்பத்தி ஆப்பிரிக்காவில் குறிப்பிடத்தக்க அளவு இருக்கிறது.

| | உலக உற்பத்தியில் |
|---|---|
| சணல்போன்ற ஒருவகைப் பொருள் (Sisal) | 56% |
| ஈந்து கொட்டையும் எண்ணெய்யும் (Palm oil & Kernel) | 80% |
| கொக்கொ | 68% |
| மணிலாக்கடலை | 26% |
| பருப்பு வகைகள் | 23% |
| காப்பிக்கொட்டை | 15% |
| கம்பளி | 8% |
| பேரீச்சம்பழம் | 32% |
| பருத்திப்பஞ்சு | 25% |

நீர்ப்பாசனத் திட்டங்களில் ஆப்பிரிக்கா 1956-க்குப் பிறகுதான் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது. எலுமிச்சை, நார்த்தை முதலிய பழங்கள், சர்க்கரை ஆகியவற்றின் உற்பத்தியும் பெருகி வருகிறது.

## தொழில்

தொழில் வளர்ச்சி ஆப்பிரிக்காவில் தொடக்க நிலையிலேயே இருக்கிறது. சுரங்கத் தொழிலும் தோட்டத் தொழிலும் ஏறத்தாழ 100 ஆண்டுகளாக நடைபெற்ற போதிலும், வெளிநாட்டார் சுரண்டலுக்குத்தான் இவை துணையாக இருந்துள்ளன. இத்தொழில்களில் வெள்ளையர் பெறும் சம்பளமும் கறுப்பர் பெறும் சம்பளமும் 20-க்கு 1 என்ற ஈவில் இருக்கின்றன. உலகிலேயே குறைந்த கூலி பெறுபவர் ஆப்பிரிக்கரே.

பெருந்தொழில்களுக்கு இன்றியமையாதனவாகிய புவியியல் பொருள்கள் ஆப்பிரிக்காவில் கிடைத்துங்கூட அவற்றைப் பயன்படுத்தக்கூடிய தொழில்கள் இங்கே இயங்கவில்லை. ஆகையால், பல்லாயிரம் கோடி மூலதனம் போட்டுப் புதிய தொழில்கள் ஏற்பட ஆப்பிரிக்காவில் வாய்ப்பு இருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த பகுதிகளில் ஓரளவு தொழில் வளர்ச்சி இருந்தது. ரொடீசியாவிலும் உகண்டாவிலும் இரயில் பாதைகள் போடப்பட்டன. நடு ஆப்பிரிக்காவில் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. ஜம்பேசி ஆற்றின்மீது மிகப் பெரிய (உலகிலேயே மூன்றுவது நீளமான) பாலம் போடப்பட்டது. மொம்பசாவிலும் (கானுவிலுள்ள) டகொரடாவிலும் துறைமுகங்கள் உண்டாக்கப்பட்டன. அஸ்வானிலும் சென்னரிலும் அணைகள் கட்டி முடிக்கப்பட்டன. வைரச் சுரங்கங்களும் தங்கச் சுரங்கங்களும் வெட்டப்பட்டன. பிரெஞ்சு ஆட்சியிலிருந்த பகுதிகளில் இந்த அளவு முன்னேற்றம் இல்லாவிடினும் அழகான நகரங்கள் உருவாக்கப்பட்டன. சீரிய சாலைகள் உண்டாக்கப்பட்டன. பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

தென் ஆப்பிரிக்கா மிக வளர்ச்சியடைந்த பகுதியாகவும் போர்த்துக்கல் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மிகமிகப் பிற்போக்கானவையாகவும் இருக்கின்றன. இந்தகைய ஏற்றத் தாழ்வுகளைப் போக்கவும் வருங்கால வளத்துக்குத் திட்டமிட்டுத் தொழில்கள் தொடங்கவும் ஆப்பிரிக்காவுக்கு ஒரு பொருளாதாரக் குழுவை நியமிக்க ஐக்கிய நாடுகள் முடிவு செய்திருக்கிறது.

## இனப் பிரச்சினை

'வெள்ளைத் தோல் உள்ளவர்களே மேலானவர்கள்; கறுப்பர்கள் அவர்களுக்கு மட்டமானவர்கள். ஆகையால் ஆட்சி நடத்தவும் அதிகாரம் செலுத்தவும் ஆடம்பர வாழ்வு வாழவும் வெள்ளை நிறத்தவர்க்கு மட்டுமே உரிமை உண்டு; அவர்கள் ஆணைப்படி அவர்களுக்காக உழைப்பதற்காவே ஏனையோர் அனைவரும் இயேசு கிறிஸ்துவால் படைக்கப்பட்டிருக்கின்றனர்' என்ற கருத்தை வெள்ளைக்காரர்கள் ஆப்பிரிக்காவில் கொண்டுள்ளனர். இதனால் வெளியே இருந்துவந்த வெள்ளையர்கள் ஆப்பிரிக்க மண்ணிலேயே பிறந்து வளர்ந்த மக்களை விலங்குகளுக்கும் கீழாகக் கருதி அவர்களை அளவுகடந்த கொடுமைக்கு உள்ளாக்கி வருகிறார்கள்.

சிறப்பாக, தென் ஆப்பிரிக்காவில் இனவெறி தலைவிரித்தாடுகிறது. அங்கு வெள்ளையர்க்கும் கறுப்பர்க்கும் வாழும் இடங்கள் இன அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன. வெள்ளைக்காரக் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் உள்நாட்டினர் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. பஸ்ஸிலும் இரயிலிலும்கூட அவர்களுடன் கறுப்பர்கள் செல்ல முடியாது. 'ஆப்பர்த்தீடு'

என்று சொல்லப்படும் இந்த ஒதுக்கல் சட்டங்கள் சொல்லொணுத் துயரை ஆப்பிரிக்கர்களுக்கு இழைத் துள்ளன. இந்தச் சட்டங்களை மீறுபவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். துப்பாக்கியும் பீரங்கியும் கொண்டு இன ஒதுக்கல் சட்டத்தை தென் ஆப்பிரிக்க அரசு நிலைநாட்டி வருகின்றபோதிலும், ஆப்பிரிக்க மக்களின் உள்ளக் குமுறல் சற்றும் குறையவில்லை. உல கெங்குமுள்ள மக்கள் அவர்கள்பால் இரக்கம் காட்டி வருகின்றனர். அவர்களுடைய தலைவரான லித்துலிக்கு, 1961-இல் உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டிருக்கிறது.

கீன்யாவில் வெள்ளையரின் நிறவெறியை ஒழித்துக் கட்ட மாவ்மாவ் கலகங்கள் நடைபெற்றன. இக்கலகக் காரர்கள் 'புரட்சிகரமானவர்கள்' 'ஆபத்தானவர்கள்' என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கருதப்பட்டு வருபவர்கள். இவர்களுடைய தலைவரும் தேசியவாதியு மான ஜோமோ கென்யாட்டா. இரண்டு லட்சம் உறுப் பினர்களுள்ள கீனியா ஆப்பிரிக்க யூனியன் என்ற அமைப்பின் தலைவராக உள்ளார்.

அல்ஜீரியாவில் 12 லட்சம் பிரெஞ்சுக்காரர்கள் குடி யேறி அந்நாட்டின் ஆதிமக்களின் உரிமைகளுக்குத் தடை யாக உள்ளனர்.

போர்த்துக்கீசியப் பகுதிகளிலும் நிறவெறி நிலவு கிறது.

அன்றாட வாழ்க்கையில் ஆப்ரிக்கரைத் தனித்து வைத்து அவமதித்தபோதிலும் கீழ்த்தரமான வேலைகள் செய்யவும் ஆபத்துக் காலத்தில் போர்ப்படைகளில் சேர்த்து அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு மாற்ருருக் குப் பலி கொடுக்கவும் வெள்ளைக்காரர்கள் தயங்கவில்லை.

உரிமை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளில் 'உலக மக்கள் அனைவரும் ஒருகுலம். மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு கிடையாது. எல்லோரும் சமம்' என்ற தத்துவம் கடைப்பிடிக்கப்படுகிறது. அங்கு வாழும் வெள்ளையர் தொகையும் குறைந்து வருகிறது.

## அரசியல் நிலை

பல தலைமுறைகளாக அரசியல் துறையில் சிறந்து விளங்கிய சிறப்பு ஆப்பிரிக்க நாடுகளில் எகிப்து, கானு, எத்தியோப்பியா மூன்றுக்குமே உண்டு. எத்தியோப்பியா கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே சுதந்தரமாக இருந்த நாடு. கானு ஐந்தாம் நூற்றுண்டிலேயே கவர்னர்கள் 16 பேரை நியமித்து அவர்கள் ஒவ்வொருவருக்குக் கீழும் சில மாநிலங்களின் ஆட்சியை ஒப்புவித்தும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் கீழும் மாவட்டங்கள் ஏற்படுத்தியும் செம்மையான ஆட்சி நடத்தி வந்திருக்கிறது. இத் தகைய நாடுகள்கூட 20-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி வரை தங்களுடைய உரிமைகளை இழந்திருந்தன.

லைபீரியா என்ற சின்னஞ்சிறு நாடு மட்டும் அமெரிக் காவிலிருந்து விடுதலை வேட்கையுடன் வந்து சேர்ந்தவர் களின் ஆர்வத்தால் 1847 முதல் சுதந்தர நாடாக இருந்து வந்துள்ளது. முதல் உலகப் போருக்குப் பிறகு, எகிப்தும் இரண்டாவது உலகப் போருக்கு பிறகு லிபியாவும் எத்தியோப்பியாவும் இழந்த சுதந்தரத்தை மீண்டும் பெற்றன. தென் ஆப்பிரிக்கா ஏற்கெனவே சுதந்திரம் பெற்ற போதிலும் ஆப்பிரிக்கருக்கு அங்கு ஓர் உரிமையும் இல்லை.

ஆப்பிரிக்காவின் எஞ்சிய நாடுகள் எல்லாம் ஐரோப் பியர்களின் ஆட்சியிலேயே, இரண்டாம் உலகப்போரும் முடிந்த பிறகும்கூட, இருந்தன. டிரஸ்டிஷிப், காமன் வெல்த் நாடு, கம்யூனிட்டியைச் சேர்ந்த பகுதி, மாண்டேட்டட் டெரிடேரி, காலனிப் பகுதி, இருநாடு களின் கூட்டு ஆட்சியில் உள்ள பகுதி, புரட்டக்டரேட் என்ற பல பெயர்கள் உள்ள ஆட்சி முறைகள் நிலவின. அரசியல் காட்சிக் கூடமாக ஆப்பிரிக்கா இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த பகுதிகளில், பிற பகுதி களை நோக்க, மக்கள்ஆட்சி முறை மேற்கொள்ளப் பட்டது. அங்கும் எல்லாப் பகுதிகளிலும் ஒரே வகையான கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆப்பிரிக்கத் தொல் மரபினங்களின் தலைவர்கள் வாயிலாக ஆட்சி நடத்தும் முறையைப் பிரிட்டிஷார் கையாண்டனர்.

பிரெஞ்சு ஆட்சி நிலவிய பகுதிகள் சிலவற்றில் அங்குள்ள மக்களுக்குப் 'பிரெஞ்சு குடிமக்கள்' என்று சட்டத்தின் வாயிலாக உரிமை வழங்கப்பட்டது. பிரான்சிலுள்ள பாராளுமன்றத்தில் அவர்களுக்கு பிரதி நிதித்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் இச்செயல் களால் வெள்ளையரல்லாதார் சிறு பயனும் பெறவில்லை. அவர்களுடைய வறுமை அணு அளவும் அகலவில்லை. பெல்ஜியர் ஆட்சி நிலவிய பகுதிகளில் அதிகார மில்லாத சட்டசபைகளே இருந்து வந்தன. போர்த் துக்கல் ஆட்சியிலுள்ள பகுதிகளில் அந்த அளவுகூட அரசியல் சீர்திருத்தம் செய்யப்படவில்லை.

1947-இல் இந்தியா சுதந்தரம் பெற்றதும் பாண் டுங்கில் நடைபெற்ற ஆசிய—ஆப்பிரிக்க மாநாடும் 1950-இல் எகிப்தில் மன்னர் பரூக் பதவியிலிருந்து

V6
N64

நீக்கப்பட்ட நிகழ்ச்சியும், 1956-இல் சூயஸ்கால்வாயின் உடைமையை எகிப்து தேசியமயமாக்கிய வீரச்செயலும் ஆப்பிரிக்கர் உள்ளங்களை ஊடுருவின. அதனால் அவர்களிடம் தோன்றிய எழுச்சியின் மாண்பும் விடுதலை உணர்வின் உறுதியும் உலகுக்கு வெளிப்பட்டன. விரும்பியோ விரும்பாமலோ மேன்மேலும் ஆப்பிரிக்கர்க்கு உரிமைகள் வழங்க வெள்ளைக்கார அரசாங்கங்கள் திட்டம் தீட்டின. 1965 தொடக்கத்தில் ஆப்பிரிக்காவில் முக்கால் பகுதி சுதந்தர நாடுகளாக உள்ளன. எஞ்சிய நாடுகளும் சுதந்தரத்தை அடையும் பாதையிலுள்ள ஒரு சில இடையூறுகளைத் தாண்டியுள்ளன. அல்ஜீரியாவிலும் அங்கோலாவிலும் தென் மேற்கு ஆப்பிரிக்காவிலும் பிற்போக்கு கூட்டத்தினரின் ஆட்சி மக்களை மயக்கியும் மிரட்டியும் வருகிறது.

வெள்ளையர் ஆட்சியின்போது எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல் சில பகுதிகளைச் சில நாடுகள் பிடித்துக்கொண்டன. மொராக்கோவில் ஒரு பகுதியை ஸ்பெயினும் மற்றொரு பகுதியைப் பிரான்சும் ஆண்டன. சகாராவிலும் இவ்வாறே. சோமாலிலந்தில் ஒரு பகுதியை பிரிட்டனும் மற்றொரு பகுதியை இத்தாலியும் ஆண்டன. காங்கோவில் பெரும்பகுதியில் பெல்ஜியமும் சிறுபகுதியில்பிரான்சும் ஆட்சி செலுத்தின. அடிமைநாடுகளாகத் தனித்தனி ஆட்சிகளில் இருந்தபகுதிகளை உரிமை பெற்ற பிறகு ஒன்று சேர்த்து ஒரே கட்டுக்கோப்பின் கீழ் கொண்டு வருவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள. செம்மையான அரசியல் கட்சிகள் அருமையாக உள்ளன; இந்தியாவில் 600 க்கு மேற்பட்ட சிற்றரசுகளைச் சர்தார் வல்லபாய் பட்டேல் இணைத்தது போன்ற செயலை ஆப்பிரிக்காவில் செய்ய வேண்டியிருக்கிறது.

570

# ஆப்பிரிக்காவின் முக்கியத்துவம்

ஏராளமான நாடுகள் ஆப்பிரிக்காவில் சுதந்தரம் பெற்றுள்ளன; ஐக்கிய நாடுகள் அவையில் இவற்றுக்கு எண்ணிக்கை வலு இருந்து வருகிறது. இந்த வாக்கு களைப் பெறுவதற்காக உலக வல்லரசுகள் ஆப்பிரிக் காவின் ஆதரவைப் பெற விழைகின்றன. ரஷ்யரும் சீனரும் ஆப்பிரிக்காவில் தங்கள் தத்துவங்களைப் பரப்பப் பெரு முயற்சி செய்து வருகின்றனர்; ஆப்பிரிக்க மாணவர்க்காக ரஷ்யாவில் தனிப் பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கரும் ஆப்பிரிக்காவில் அக்கறை காட்டி வருகின்றனர். லிப்யா, லைபீரியா முதலிய நாடுகளில் கடற்படை, விமானப்படைத் தளங்களை அமெரிக்கா வைத்திருக்கிறது. போர்க்காலத்துக்கு உரிய தொழிற் சாலைகள் நடத்துவதற்கு மறைவான இடங்கள் ஆப்பிரிக் காவில் உள்ளன. சூயஸ் கால்வாய் மூடப்படும்போது ஆசியாவுடன் போக்குவரத்துக்கு ஆப்பிரிக்காவைச் சுற்றி தான் அமெரிக்கக் கப்பல்கள் செல்லவேண்டும். அமெரிக் கரின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவும்' உபரி மூலதனத்தை முதலீடு செய்யவும், தொழிற்சாலை களுக்கு வேண்டும் மூலப்பொருள்களைப் பெறவும் அவர் களுக்கு ஆப்பிரிக்காவின் ஆதரவு இன்றியமையாதது.

ஆப்பிரிக்க இனத்தவராகிய நீக்ரோக்கள் அமெரிக்கா வில் இருப்பதால் இந்த இனத்துத் தலைவர்களாக உள்ள அரசியல் அலுவலர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஆப்பிரிக்காவுக்கு அடிக்கடி அனுப்பி அமெரிக்கர் ஆப் பிரிக்கருடன் நல்லுறவை வளர்க்கப் பாடுபடுகின்றனர் லைபீரியா என்னும் சுதந்தர ஆப்பிரிக்க நாடு, ஆப்பிரிக் காவில் ஒரு சிறிய அமெரிக்காவாக விளங்கி வருகிறது.